**<u>அசல் வழக்கு எண்: 61/2022</u>**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 17th day of April 2026

பி.வா.சா.1. நடராஜன், த/பெ. ராமநாதன்,

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது மனைவி பெயரில் மாற்றம் செய்யப்பட்ட தாவா சொத்திற்கான பட்டாவானது சுமார் 10 நாட்கள் தான் அவர் பெயரில் இருந்தது. அதன் பின்னர் மீண்டும் வாதி பெயரில் மாற்றப்பட்டுவிட்டது. எனது மனைவி போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலம் சம்மந்தப்பட்ட வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கு எண் 267 ஆகும். வருடம் தெரியவில்லை. அந்த வழக்கானது எத்திராஜ் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களும் கட்டுப்படுத்தி போடப்பட்டதாகும். நானும் எனது மனைவியும் நில தகறாறு செய்ததாக வாதி எங்கள் மீது போளூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எங்களை விசாரித்தார்களா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கான அடங்கல் பதிவேடு எங்கள் பெயரில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மாற்றப்பட்ட பின் தாக்கல் செய்வோம். வாதி பெயரில் தாவா சொத்துக்கள் செட்டில்மெண்ட் கொடுக்கப்பட்ட தேதியில் இருந்து அவரும் அவரது தாயாரும் தான் நிலத்தில் பயிர் செய்து அதை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. இன்றைய தேதியில் தாவா சொத்துக்களில் வாதி பயிர் செய்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை வாதி செட்டில்மெண்ட் மூலம் பெற்று சட்டப்படி அனுபவித்து வந்த நிலையில் அவருக்கு தெரியாமல் தனிச்சையாக அந்த செட்டில்மெண்ட் பத்திரம் ரத்து செய்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. வாதி தாயார் சின்னகுழந்தைக்கும் 1ம் பிரதிவாதி எல்லம்மாளுக்கும் திருமணத்தில் இருந்தே பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். சின்னகுழந்தை எந்த ஊரில் வசித்து வந்தார் என்று எனக்கு தெரியாது. எல்லம்மாள் 2019ம் வருடம் காலமானார். எல்லம்மாள் காட்டுதெள்ளூரில் உள்ள எங்கள் வீட்டில் தான் உடல்நிலை சரியில்லாமல் இருந்து இறந்துவிட்டார். இறுதி சடங்குகள் நான் தான் பண்னினேன். எனக்கும் வாதிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரிதான். இறப்பிற்கு வாதி வந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. வாதியும் எல்லம்மாள் இறப்பிற்கு வந்தார். உண்மையில் எல்லம்மாள் இறந்த விவரம் வாதிக்கு வழக்கு விசாரணையின் போது தான் தெரிய வந்தது என்றால் சரிதான். வாதி பெயரில் தாவா சொத்துக்கள் செட்டில் மெண்ட் மூலம் கிடைக்கப்பெற்று அவர் அனுபவத்திற்கு வந்து செட்டில்மெண்ட் ஊர்ஜீதம் ஆன

பின்னர் அந்த செட்டில்மெண்ட்டை சட்டப்படி தன்னிச்சையாக ரத்து செய்தது செல்லாது என்பதால் வாதி வழக்கில் கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் எனது மனைவி பெயரில் ஏற்பட்ட தான செட்டில்மெண்டும் செல்லாது என்பதால் தாவா சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |